# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 1924/32 - 2015 ජූලි 22 වැනි බදාදා - 2015.07.22

***1924/32 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதி புதன்கிழமை***

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி அமைச்சர் முனசிங்ஹ காரியவசம் அப்புஹாமிலாகே தொன் சோமதாச குணவர்தன ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

மத்திய மாகாணத்தில், நுவரெலியா மாவட்டத்தில், ஹங்குரன்கெத்த பிரதேச செயலாளர் பிரிவில், கண்ணேவ கோரளையின் சிறு பிரிவில், புளுகஹபிடிய கிராமத்திலமைந்த, நில அளவை நாயகத்தினால் 2014.02.12 ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட என்யு/யூஊச/2013/400 ஆம் இலக்கம் கொண்ட ஆரம்ப வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுமார் 0.0174 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய "ரஹதுங்கொட வத்த ரட்லண்ட் பிரிவு " எனும் கீழ்க்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணித்துண்டு :

01. **துண்டு 'ஏ' - ரஹதுங்கொட வத்த ரட்லண்ட் பிரிவு - விஸ்தீரணம் : 0.0174 ஹெக்டயார்**

வடக்கு : மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை உரிமை கோரும் ரஹதுங்கொடவத்த ரட்லண்ட் பிரிவு, பாதை (வீ.அ.அ.) மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை உரிமை கோரும் ரஹதுங்கொடவத்த ரட்லண்ட் பிரிவு; கிழக்கு : மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை உரிமை கோரும் ரஹதுங்கொடவத்த ரட்லண்ட் பிரிவு ; தெற்கு : மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை உரிமை கோரும் ரஹதுங்கொடவத்த ரட்லண்ட் பிரிவு ; மேற்கு : மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை உரிமை கோரும் ரஹதுங்கொடவத்த ரட்லண்ட் பிரிவு மற்றும் பாதை (வீ.அ.அ.).

எம். கே. ஏ. டீ. எஸ். குணவர்தன,
காணி அமைச்சர்.

எனது இல.: 4-3/9/2013/டப்ளிவ்எஸ்/479.
காணி அமைச்சு,
'மிஹிகத மெதுர',
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2015.05.13.

08 - 135

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 1914/30 மற்றும் 2015.05.13 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் தென் மாகாணத்தில்

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

மாத்தறை மாவட்டத்தில் தெவிநுவர பிரதேச செயலாளர் பிரிவில், கிரிந்த புஹுல்வெல்ல பத்தவ சிறு பிரிவில் கடவெத்துவ, தம்பகல, வலகந்த மற்றும் வதுகொலகந்த கிராமங்களில் அமைந்துள்ள மாகாண சிரேஷ்ட நில அளவை மா அதிபரால் தயாரிக்கப்பட்ட இல. எம்ஆர்/எஸ்ஜீ/ஆர்டீஏ/2014/377 இல் 2015.02.09 ஆந் திகதிய சுவட்டு இலக்கத்தின்படி சுமார் 16.0005 ஹெக்டயார்ஸ் விஸ்தீரணம் கொண்டதுமான காணித் துண்டுகள் பின்வரும் விஸ்தீரணங்களினாலும் எல்லைகளினாலும் விபரிக்கப்பட்டுள்ளன என்பது.

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவில், ககபட பத்துவ வடக்கு சிறு பிரிவில், வலகந்த மற்றும் வதுகொலகந்த ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள மாத்தறை மாவட்ட சிரேஷ்ட நில அளவை மா அதிபரால் தயாரிக்கப்பட்ட இல. எம்ஆர்/கேஆர்என்/ஆர்டீஏ/2015/16 இல் 2015.02.09 ஆம் திகதிய சுவட்டு இலக்கம் கொண்ட துண்டு இல. 88 தொடக்கம் 163 வரை காட்டப்பட்டுள்ள விஸ்தீரணம் சுமார் 11.8188 ஹெக்டயார்ஸ் கொண்டதுமான காணித் துண்டுகள் பின்வரும் விஸ்தீரணங்களினாலும் எல்லைகளினாலும் விபரிக்கப்பட்டுள்ளன என்பதாக திருத்தம் செய்யப்படுகின்றது.

எம். கே. ஏ. டீ. எஸ். குணவர்தன,
காணி அமைச்சர்.

குறிப்பு இல.: 4-3/6/2014/எச்டப்ளிவ்/442.
காணி அமைச்சு,
'மிஹிகத மெதுர',
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2015.06.05.

08 - 137